# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன்
JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 5** **Reg No.TNBIL/2016/70171** **ISSUE - 11**

**NOVEMBER 2021 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**

Mob.: No. **9894261333**

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



எனக்கு அன்பான வாசகர்களுக்கு

மறுபடியும் ஜாமக்காரன் மூலமாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.

கன்வென்ஷனில் பேச ஏராளமான அழைப்புகள் எனக்கு வந்த வண்ணமிருக்கிறது. இப்போதைக்கு கெரோனா சூழ்நிலையில் நான் பிரயாணம் செய்வது நல்லதல்ல. நிச்சயமாக கர்த்தர் ஊழிய வாசலை திறப்பார் அதுவரை என்னை உயிரோடு வைப்பார் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன். இப்போது ஜாமக்காரன் மூலமாக உலக நடப்பு, செய்திகளோடு ஆவிக்குரிய செய்திகளோடும் உங்களை மாதா மாதம் சந்திக்கிறேனே அது எனக்கு மிகவும் ஆத்ம திருப்தியை கொடுக்கிறது.

ஜாமக்காரனில் வெளியிட்ட ஒரே செய்தி, அதை வாசித்த ஒவ்வொருவரையம் **விதவிதமான முறையில்** உணர்த்தியுள்ளது. அப்படி எழுதியவர்களின் அந்த செய்தியே என்னை திரும்ப திரும்ப கர்த்தரை துதிக்கச் செய்கிறது. கர்த்தருடைய கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக

**கேள்வி – பதில்** பகுதியை 2022 ஜனவரி மாதத்திலிருந்தாவது தொடங்க வேண்டும் என்று ஏராளமானவர்கள் வேணடுகோள் வைத்துள்ளார்கள். எல்லாருடைய கேள்விகளையும் சேர்த்து வைத்துள்ளேன். விரைவில் கேள்வி – பதில் பகுதி தொடங்குவேன். ஜெபிக்கிறேன். ஜெபிக்கவும்.

– டாக்டர் **புஷ்பராஜ்**

# NOVEMBER - 2021

**எச்சரிப்பு !** **எச்சரிப்பு !!**

# தேவ ஆக்கினைக்குள் அகப்படபோகிற CSI Vellore Diocese ன் பிஷப்பும் ஆயர்களும் டையோசிஸ் மக்களும்.....



வெல்லூர் CSI டையோசிஸ்குள், **ஊரீஸ்** கல்லூரி மேல்நிலை பள்ளிகளின் 150வது ஆண்டு விழா என்ற பெயரில் **விக்கிரக வணக்கம் நுழைந்தது.** வேலூர் **பொற்கோவில்** நாராயனி பீடத்தின் **மடாபதி போர்வையில்** இருக்கும் சக்தி அம்மா என்று அழைக்கப்படும் நாராயணியாக உருவானவர் என்று தன்னைத்தான் அழைத்துகொள்ளும் **ஒரு இந்து விக்கிரக பூசாரியை** வெல்லூர் CSI பிஷப் Rt. Rev. சர்மா நித்யானந்தம் அவர்கள் கிறிஸ்தவ பள்ளிக்கூடத்துக்கு அவரை அழைத்து ஊரிஸ் பள்ளியில் கட்டப்பட்ட புதிய கட்டிடங்களை திறந்துவைக்க சொன்னார். ஆனால் அந்த மடாதிபதியோ, தங்களின்



பேசாத விக்கிரத்தோடு **பூஜை** செய்து, **மந்திர தண்ணீர்** தெளித்து அவரோடு வந்த பல பூசாரிகள் **இந்து விக்கிரக சுலோகங்களை ஓதி** பள்ளியின் புதிய கட்டிடத்தை திறந்து வைத்தார்களாம் அப்படியே அந்த மடாதிபதியின் **ஆசீர்வாதத்தை பிஷப்** அவர்களும் இதற்கு காரணமான **ஆயர்கள்,** டையோசிஸ்ஸீல் உள்ள **பெரும் தலைகளும்** பய பக்தியோடு அந்த ஆசீர்வாதத்தை பெற்றது அதிர்ச்சியை கொடுத்தது இதன் விவரங்களை தொலைபேசி வழியாய் என்னிடம் கூறிய ஏராமான சகோதரிகள், சகோதரர்கள், ஆயர்களில் சிலரும் அழுது கொண்டே விவரத்தை கூறியபோது நானும் அதிர்ச்சியடைந்தேன்.

அனேக பேராட்டங்களுக்கு பிறகு வெல்லூர் டையோசிஸ்க்கு **நல்ல பிஷப்** ஒருவர் கிடைத்தார் என்று நான் மிகவும் சந்தோஷப்பட்டேன். **சபைகளை வசனத்தில் வளர்த்தும்படி** பிஷப் அவர்கள் **பதவி ஏற்றதும்** அவருக்கு கடிதம் எழுதி கேட்டுக்கொண்டேன். பதவி ஏற்றதும் அவரும் என்னை **அண்ணா** என்று அன்போடு அழைத்து பதில் கடிதம் எழுதினார். நானும் நேரில் சென்று ஆலோசனைக்கூறி ஜெபித்து வந்தேன்.

ஆனால் அவர்மேல் எனக்கு உள்ள நல்ல நம்பிக்கைகளையும் எதிர்ப்பார்ப்புகளையும் ஊரீஸ் பள்ளியில் நடந்த 150வது வருட நிகழ்ச்சி பொடிப்பொடியாக்கிவிட்டது.

☐ பொற்கோவில் **நாராயணி அம்மா** என்று அழைக்கப்படும் கள்ள மடாதிபதிமேல் எத்தனை **கொலை வழக்குகள்,** கற்பழிப்பு **வழக்குகள்** உண்டு என்பதை வெல்லூரில் பிறந்து வளர்ந்த **பிஷப்** அவர்களுக்கே தெரியுமே ! எத்தனை மாதங்கள் போலிசுக்கு பிடிபடாமல் இருக்க அவர் **தலைமறைவாக** இருந்தார் என்பதும், **அமலாக்க துறை, வருமாண வரி** இலாக்காக்கள் இவர் பொற்கோவிலை **ரைடு செய்தது** தினசரி பத்திரிகைகளில் வெளிவந்ததாக அறிந்தோமே !

இப்படி போலீஸ்தேடிவரும் கள்ள பூசாரியா **உயிருள்ள** தெய்வமாகிய **இயேசுவை ஆராதிக்கும்** கிறிஸ்தவ மக்களுக்குரிய கட்டிடத்தை திறந்து வைப்பது! ஆத்தம தாகம் உள்ள மிஷனரிகளால் ஊரிஸ் பள்ளிக்கூடமும் **ஊரிஸ் கல்லூரியும்** கட்டப்பட்டது மிஷனரிகளின் தியாகம் செய்து **மிஷனரிகளால்** கட்டப்பட்ட கட்டிடத்தை இந்துமத பூசாரியா **பூஜை செய்து, அன்பே சிவம்** என்று கூறி திறந்துவைப்பது. **இதற்குபதில்** அருகே **வெல்லூர் ஜெயிலில்** உள்ள **மனம் திரும்பின கொலைகாரனைக் கொண்டு** திறப்புவிழா செய்திருந்தால் எத்தனை சிறப்பானதாக இருந்திருக்கும் !

அந்த கள்ள **நாராயனியின் பணம்** நாய்க்கு போடும் **எலும்பு துண்டாக** ஒரு பெரும்

தொகை **பிஷப்புக்கும்** அவர் கூட்டாளிக்கும் கிடைத்ததால்தான் நம் பரிசுத்த **தெய்வத்துக்கு விரோதமான விக்கிரக ஆராதனைகாரனான** அந்த பூசாரியை வரவழைத்ததால் வெல்லூர் முழுமைக்கும் அங்குள்ள கிறிஸ்தவர்களுக்கும் **சாப கேட்டை** உண்டாக்கியது என்று பலர் கூறக் கேட்டேன்.

- ☐ வெரும் **30 வெள்ளிக்காசுக்காக** தன் குருவையே காட்டிக்கொடுத்த **யூதாஸ்** காரியூத்துக்கு **பிஷப்** அவர்களின் செயலை ஒப்பிடலாம்.

## எலிசா

- ☐ **உண்மையான** ஊழியர்க்காரனை அற்பமாக எண்ணிய **நாகமான்கொண்டு** வந்த பணத்தை **எலிசா தீண்டவில்லை,** நாகமானை **பார்க்கவும்** இல்லை. ஆனால் நாகமான் கொடுக்க வந்த **பணத்தை** உடன் ஊழியனான **கேயாசி** தன் **குருவுக்கு தெரியாமல்** நாகமான் பின்னே ஓடி சென்று அவன் கொடுத்த **பணத்தை பெற்றுக்கொண்டதால்** அந்த நிமிடமே அவன் குஷ்டரோகியானான். இந்த நிகழ்ச்சிகள் பிஷப்புடன் கூட உடந்தையாயிருந்தவர்களும் இந்த பாவசெயலுக்கு உடன்பட்ட சபை நிர்வாகிகளுக்கும் இந்த செயல் நம் கர்த்தருக்கு எதிரான பாவம் என்று தெரியாதா?

ஒரு **ஆகான்** செய்த **பாவம்** காரணமாக **இஸ்ரவேலர்களின் பாளையம் எங்கும் சாபம்** உண்டாகி **மரண ஓலம்** கேட்டதே ! அதன் அடையாளமாகத்தன் சமீபத்தில்கூட **வெல்லூரில் மட்டும் பூமி அதிர்ச்சி** உண்டானது என்று சிலர் கூறக் கேள்விப்பட்டேன்.

ஜாக்கிறதை **பிஷப்பும் – நிர்வாகிகளும்** செய்த இந்த பாவ சம்பவத்தால் டையோசிஸ்ஸில் உள்ள சபை **மக்கள் அனைவரும்** பதிக்கப்படுவார்கள்.

பள்ளியில் படித்த **பழைய மாணவன்** என்ற பெயரில் அந்த **மனுஷனை மேடையில் அமரவைத்து** கவுரவப்படுத்தலாம். தவறேதும் இல்லை. அவரை **பூஜை** செய்யவோ, **மந்திரித்த தண்ணீர்** தெளிக்கவோ. **நன்றி உரையாற்றவோ** அனுமதித்திருக்கக்கூடாது. அப்படி அனுமதித்ததால்தானே **அன்பே சிவம்** கிறிஸ்தவ மேடையில் ஒலித்தது.

- ☐ சமீபத்தில் **சென்னையில்** CSIயின் 175 வருட நினைவு விழாவுக்கு **தமிழ்நாடு முதலமைச்சரை** வரவைத்து கவுரவித்தார்கள் **இதிலும் தவறேதும் இல்லை.** அவர் ஒரு அரசியல்வாதிதான் ஆனால் அவர் **நம் தெய்வத்தின் மனதை** வேதனைப்படுத்தும் வார்த்தை ஏதும் பேசாமல் CSI கிறிஸ்தவர்களை **வாழ்த்தி விடைபெற்றார்.** இது நல்ல


நாகரீகம். அவர் தமிழ்நாட்டை ஆளுகின்றவர். அவர் தயவு CSI பெறுப்பில் இருக்கும் கல்வி சாலைகளுக்கும், ஆலய கட்டுமான அனுமதிக்கும் தேவை.



☐ அதே மாதிரி நாலுமாவடி **மோகன்** C. **லாசரஸ்** அவர்கள் **அரசியல்வாதியான வை. கோ.** அவர்களை **திறப்பின் வாசல்** ஜெப கூட்டத்திற்கு **தலைமை தாங்க** வரவழைக்கபட்டார். அவர் **மனைவியும் வை. கோ.** அவர்களும். **இரகசிய கிறிஸ்தவர்கள்** என்று கூறப்படுகிறது. அவரின் நல்ல கிறிஸ்தவ பிரசங்கமும் மிக அற்புதம். நானே வை.கோ. அவர்களின் கிறஸ்தவ பிரசங்கத்தை கேட்டேன்.

ஆனால் **திறப்பின் வாசல்** கூட்டத்தில் **வை. கோ.** அவர்கள் தன் சொற்பொழிவை முடிக்கும்போது அவர் கூறிய வார்த்தை **மோகன் C. லாசரஸ்** முகத்தில் அறைந்ததை போல் ஆயிற்று. அவரின் முடிவுரை எப்படி இருந்தது தெரியுமா?

அவர் நிருபர்களுக்கு பேட்டியளித்தபோது **வைக்கோவாகிய** நான் **எல்லா தெய்வங்களையும்** மதங்களையும் மதிக்கிறவன், ஒரு குறிப்பிட்ட **மதத்துக்குள் என்னை அடக்கிக்கொள்ள** எனக்கு பிரியமில்லை என்றார். **போதுமா?** வை. கோ. அவர்ளுக்கு **எந்த தலைப்பை** கொடுத்தாலும் ஆயத்தம்இல்லாமல் **அந்த நிமிடமே பிரசங்கிக்கு**ம் சமார்த்தியம் உள்ளவர், காரணம், அவர் ஒரு அரசியல் கட்சி **பேச்சாளர்.** எந்த கட்சிக்கு அவர் மாறினாலும் அந்த கட்சிக்கு ஏற்றாற்போல் பேசும் திறமை உள்ளவர். **கிறிஸ்தவ** பிரசங்கம் செய்வதும் அவருக்கு கை வந்த கலை என்பது மோகன் சி. லாசரஸ் அவர்களுக்கு விளங்கியிருக்கும். ஒரு **அரசியல்வாதியை மேடையில் ஏற்றியதின்** பாதிப்பு எப்படியிருக்கும்.! திறப்பின் வாசல் ஜெபத்துக்கு வந்த அறைகுறை கிறிஸ்தவர்கள் வை.கோ. அவர்களின் **கொள்கையின்படியே** நாமும் வாழ்வோம் என்று யாராவது தீர்மானித்திருந்ததால் **மோகன் C. லாசரஸ்** அதற்கு கடவுளிடம் பதில் சொல்ல வேண்டி வரும்.



ஒருவேளை **கூட்டத்தின் முடிவில்** மோகன் C.லாசரஸ் **உண்மையான** வைராக்கியமான ஊழியக்காரனாக இருந்திருந்தால் உடனே மைக்கில் திரு. **வை. கோ.** அண்ணன் கூறியது **அவரின் சொந்த கொள்கையாகும்.** ஆனால் நம் **இயேசுகிறிஸ்து** கூறியது என்ன ? நானே **வழி,** நானே **சத்தியம்,** நானே **ஜீவன்,** நானே **வாசல்,** இந்த **வாசல் வழியாக பிரவேசிப்பவனே அல்லாமல்** வேறு யாரும் **பரலோக ராஜ்ஜியத்தை** சுதந்தரிக்க முடியாது. அதனால் **எல்லா தெய்வமும்** ஒன்றல்ல, **இயேசு கிறிஸ்து** மாத்திரமே வானத்தையும், பூமியையும் உண்டாக்கின **தெய்வம்** என்று கூறி



முடித்திருந்தால் அதே இடத்தில் **இயேசு கிறிஸ்துவின்** மன்னிப்பை **மோகன் C. லாசரஸ்** பெற்றிருக்க முடியும்.

## **மறுபடியும் தவறு** செய்த **மோகன் C. லாசரஸ்**

**மறுபடியும் மறுபடியும்** தவறு செய்த ஊழியர் **மோகன் C. லாசரஸ்,** சில வருடத்துக்குமுன் **சினிமா நடிகையான நக்மாவை** நான் **எர்னாகுளத்தில்** சந்தித்தேன் என்றும் அவர் **தன் சாட்சியை கூறினாள்.** கர்த்தருடைய ஆவி **நக்மா மேல்** இருப்பதை **நான் ஆவியில்** உணர்ந்தேன். ஆகவே **நாலுமாவடி திறப்பின் வாசல்** ஜெபகூட்டத்திற்கு வரும்படி அழைப்பை கொடுத்தேன் என்றார்.

**நாலுமாவடியில்** பிரபல நடிகை **நக்மாவின்** வர வை குறித்து **வாயில் பல் இல்லாத கிழவர்களும்** கேள்விப்பட்டு புது தெம்போடு ஜெபகூட்டத்தில் **நமக்மாவை** காண திரண்டிருந்தார்கள்.

**வை. கோ.** அவர்களைப்போல் நக்மாவும் **நல்ல பிரசங்கம்** செய்தார். முடிவில் **மோகன் C. லாசரஸ் நக்மா** அவர்களுக்கு பரிசுத்தாவின் **அக்கினி அபிஷேகம் அவரின்மேல் உண்டு** என்று கர்த்தர் எனக்கு சொன்னார். அதன் காரணமாக **நக்மாவுக்கு** சுகமளிக்கும் வல்லமை, **பிசாசை துரத்தும்** வல்லமை உண்டு. ஆகவே யார் யார் நக்மா அவர்கள் தன் கையை உங்கள் மேல் வவைத்து ஜெபிக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அவர்கள் வரிசையில் வரலாம் என்றார். அவ்வளவுதான் மக்கள் முண்டியடித்துக்கொண்டு **நக்மா கை** தங்கள் **தலையில்** படவேண்டும் என்று வரிசையில் வந்து குவிந்தார்கள் தெரியுமா? இதற்கு ஆதாரம் அவர்கள் வெளியிட்ட அன்றைய வீடியோ டேப் சாட்சி.

### பின் நடந்தது என்ன ?

சில மாத்திலேயே **எலக்ஷன்** வந்தது. உடனே நக்மா தான் கூறிய சாட்சியை மறுதலித்து இப்போது நான் **முஸ்லீம் மதத்தில்தான்** இருக்கிறேன். **காங்கிரஸ் வேட்பாளராக** தேர்தலில் நிற்கிறேன் என்றாள். ஆனால் படுதோல்வியும் அடைந்தாள். அவள் சகோதரி ஜோதிகா நடிகர் சிவக்குமார் மகனும் **நடிகர் சூரியாவின்** மனைவியுமாகும். ஜோதிகா வீட்டுக்கு நக்மா போன போது **நக்மாவின்** செயல் வீட்டில் யாருக்கும் பிடிக்கவில்லை. யாரும் முகம்கொடுத்து பேசவில்லை. எல்லா இடத்திலும் அவளுக்கு **தோல்வி.** மறுபடியும் **கட்சி மாற** தீர்மானித்தார். இப்படி போகிறது **பழம்பெரும் நடிகையின் நடிப்பு பயனம்.**

சரி இப்போது **வாசகர்களாகிய** நீங்களே சகோ. **மோகன் C. லாசரஸ்ஸீடம்** கேளுங்கள் ஐயா, தீர்க்கதரிசி அவர்களே ! **கேரளாவில்** நக்மா நடிகையின் **சாட்சி**

**கேட்டபோதே** அவர் அங்கு கூறிய **சாட்சி உண்மை** என்பதை ஆவியானவர் எனக்கு காட்டினார். என்றீர்களே? அதன் பின் நக்மாவை **நாலுமாவடிக்கு** வரும்படி அழைப்பு கொடுத்து **நக்மாவை சுகமளிக்கும் வரம்பெற்ற சகோதரி** என்று அறிமுகப்படுத்தி அவர் கை வைத்து ஜெபித்தபோது **பலர் சுகம் பெற்றதாகவும்** பிசாசு பிடித்த பலர் விடுதலை பெற்றார் என்றும் **அறிவித்தீரே** அன்று **எந்த ஆவி** உங்களை நடத்தியது ? **நடிகை நக்மாவின்** சாட்சி உண்மை என்பதை நக்மாவின் **உள்ளத்துக்குள்** பிரவேசித்து கண்டுபிடித்தது யார் ? **திறப்பின் வாசலில்** ஜெபிக்க வந்த ஜெப வீரர்களையெல்லாம் **முட்டாள்களாக்கினீர்களே! நீங்கள் பெற்ற ஆவி எது?** இப்போதும் **ஜெபத்தில் பெயர் அழைத்து** அவர்களை மேடையில் அழைத்து **நக்மா** சாட்சி சொல்ல வைத்த மாதிரி நீங்கள் கூட்டத்தில் கூறும் சாட்சிகளும் பத்திரிகையில் எழுதும் சாட்சிகள் எல்லாம் **பொய் சாட்சிகளாக** இருக்கிறதே ! ஆகவே இயேசு விடுவிக்கிறார் வாசகர்களாவது மோகன் சிப் லாசரஸ்ஸிடம் இதைக்குறித்து கேள்வி கேளுங்கள் என்ன பதில் வருகிறது என்று பார்க்கலாம். **சத்தியம் TV** காரர்களுக்கு கூட இவைகளை குறித்து **கேள்வி கேட்க தோன்றவில்லையே? சத்தியம் TV அவர்களும் உங்கள் ஊழியத்தினிமித்தம் பல விதத்தில் ஏமாற்றப் பட்டிருக்கிறார்கள்.**

இப்படி எத்தனை ஆயிரம் பேர் **உங்கள் தீர்க்கதரிசனத்தையும்** ஜெபத்தில் **பெயர் அழைப்பதையும்** நம்பி ஏமார்ந்திருப்பார்கள் !

☐ **வெல்லூர்** CSI டையோசிஸ்ஸிலும் **பிஷப் அவர்கள்** இப்படித்தான் ஏமாந்தார் என்று நான் கூறவில்லை.

வெல்லூர் **ஊரீஸ்** பள்ளியில் **தங்ககோவில்** நாராயனி சக்தி அம்மா பூசாரியை 175வது விழாவிற்கு **பிஷப்** அவர்கள் வரவழைத்தது, அவர் அந்த பூசாரியைப்பற்றி அறியாமல் அவரை வரவழைக்கவில்லை. அவரைப்பற்றிய விவரம் **நாடே அறியும்போது** வெல்லூரில் பிறந்து வளர்ந்த **பிஷப்** அவர்கள் அறியாமல் இருப்பாரா ?

**அறிந்திருந்து தவறு செய்கிறவன்** அனேக அடிகள் **அடிக்கப்படுவான்** என்று வேத வசனம் கூறுகிறது.

**ஊரீஸ் பள்ளி** 175வது வருட அழைப்பிதழில் **தங்ககோவில் பூசாரிக்கு** இவர்கள் கொடுத்த அடைமொழி என்ன தெரியுமா?

In the Divine Presence **கடவுளின் தெய்வீக நாகனின்** முன்னிலையில் **விழா** நடத்தப்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்கள். அப்போது **கிருஸ்து எங்கே?** இயேசு கிறிஸ்துவுக்கு **துணிகரமாக துரோகம்** செய்யும் **இவர்கள் அமர்ந்த** மேடையில் இயேசு இருப்பாரா? இந்துமத **பூஜை செய்து திறந்து வைத்த** அறைகளை கடவுள் ஆசீர்வதிப்பாரா?

**தங்க கோவில்** நாராயணி பூசாரி தன் விபச்சார **பாவம் பண ஊழல்** போலீஸ் விசாரணை இப்போது நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கும் **பழைய** கேஸ்கள் குறித்து தன்னைப் பற்றி மக்களிடையே உள்ள **கெட்ட பெயர்களை** மறைக்க **வெல்லூர் பிஷப்** மூலம் அழைப்புபெற ஏற்பாடு செய்து **175ம் ஆண்டு விழாவை** இந்த பூசாரி **ஒரு கேடயமாக** மிக ஞானத்தோடு **பயன் படுத்திக்கொண்டார்** என்று ஊரே பேசுகிறது.

## பிஷப் அவர்களுக்கு ஒரு ஆவிக்குரிய வேண்டுகோள்

**பிஷப் ஐயா,** உங்களை நான் நேசித்ததால் இந்த ஆலோசனையை கூறுகிறேன்.

**விக்கிரக ஆராதனையை** வெறுக்கும் நம் பரிசுத்த தெய்வத்துக்கு விரோதமான செயலை நீங்கள் செய்தீர்கள். அதற்காக நீங்கள் **தனிப்பட்ட முறையில்** நம் கர்த்தராகிய **இயேசு கிறிஸ்துவிடம் மனம் நொந்து பாவ மன்னிப்பை** பெற வேண்டும்.

அடுத்து உங்களை **பின்பற்ற வேண்டிய** டையோசிஸில் உள்ள மக்களுக்கு நீங்கள் **தங்ககோவில் பூசாரியை** விழாவுக்கு அழைத்ததால் உங்கள் சபை மக்களுக்கு பெறும் **சாட்சி இழப்பை** உண்டாக்கிவிட்டீர்கள். அந்த **ஊரீஸ் பள்ளி** 175வது **ஆண்டு விழாவுக்கு** பிறகு **வெல்லூர்** CSI **டையோசிஸ்ஸிலிருந்து** எத்தனைபேர் **தங்க கோவிலுக்கு** சென்று அந்த **விக்கிரத்தை** ஆராதிக்கப்போகிறார்களோ தெரியவில்லை.

**ஆகவே** டையோசிஸ் சபை மக்களிடம் நீங்கள் **பகிரங்க மன்னிப்பு கேட்டு** இனி இதை போன்ற சாட்சியற்ற **நிகழ்ச்சிகளுக்கு துணை போக மாட்டேன்** என்று **உறுதி கூற வேண்டும்.** இவைகளை கர்த்தரும் கவணிப்பார்.


நான் கூறிய இந்த ஆலோசனைக்கு செவி சாய்க்க உங்களின் **பிஷப்** என்ற **பதவியும், கௌரவமும்** இடம் கொடுக்காமல் போனால், அதற்கு ஈடாக மற்றொரு காரியத்தை நீங்கள் செய்யலாம். உங்களின் மேலும் உங்கள் டையோசிஸ்ஸின்மேல் **தேவ கோபம் வராமல் இருக்க** நீங்கள் **உங்கள் பிஷப் பதவியிலிருந்து** விருப்ப ஓய்வு பெற்று **பிஷப் பதவியை தூக்கி எறியுங்கள்.** இதனால் உங்கள் மதிப்பு கூடும், கர்த்தரும் உங்கள் செயலில் பிரியப்படுவார். **கர்த்தரின் கோபம் தணிய** நானும் மற்றவர்களும் உங்களுக்காக டையோசிஸ் மக்களுக்காக தொடர்ந்து ஜெபிப்போம்.

கர்த்தர் உங்களுக்கு **சமாதானத்தையும் பாவ மன்னிப்பையும்** அருளுவாராக

**மேய்ப்பன்** எவ்வழியோ **ஆடுகளும்** அவ்வழியே !

இப்படிக்கு,
உங்கள் தாழ்மையுள்ள
டாக்டர் **புஷ்பராஜ்**

# கர்த்தருக்குள் நல்ல ஓட்டத்தை முடித்தார்.



Dr. தேவ ஞானவரம் IEM மிஷனரியும் வேதாகம மொழி பெயர்ப்பாளருமாவார். தனது 71வது வயதில் 2021 வருடம் கர்த்தருக்கு ஊழியம் செய்த நிலையில் மரித்துப்போனார். அவர் வாழ்க்கை சாதரண வாழ்க்கையில்லை, சவால்கள் உள்ள வாழ்க்கை. சிறுவயதிலேயே போலியோ வியாதியினால் கால்கள் சூம்பி போன நிலையில் மிஷனரி ஊழியத்துக்கு ஒப்புக் கொடுத்தவர். IEM ஸ்தாபகர் **Dr. Rev. தியோடர் வல்லியம்ஸ்** அவர்களும் **Dr. தியோடர் சீனிவாகம்** அவர்களும் ஊழியத்தின் பாதையில் சகோதரன் அவர்களை ஊக்கப்படுத்தினார்கள்.

இதன் மத்தியில் **இளம்பிள்ளைவாத வியாதியும்** ஒன்று சேர **காலும்** கைகளும் **விரல்களும் மடங்கி** செயல் இழந்தது. இந்த நிலையில் நான் எப்படி மிஷனரி வேலை செய்வேன் என்று ஜெபித்து கலங்கினார். அந்த சூழ்நிலையில் **Linguistic** மொழியில் ஆசிரியையான **ஆலீஸ் டோரீஸ்** என்பவர் சகோ. தேவவரத்தை நோக்கி நீங்கள் செய்யும் மிஷனரி ஊழியத்தில் வேதாகம **மொழி பெயர்ப்பை** குறித்து ஏன் சிந்திக்கக்கூடாது என்றார். அதன்பின் **வேதாகம மொழி பெயர்ப்பில்** ஆர்வம் வந்தது.

**சக்கர நாற்காலியில்** அமர்ந்தவாறே தன் பணிகளை தானே செய்ய கற்றுக் கொண்டார். அலகாபாத் வேதாகம பள்ளியிலும் இந்துஸ்தான் வேதாகம பள்ளியிலும் பயின்று ஒரிசா சென்றார். அதன்பின் அவர் மனைவி Mrs. வனிதா தேவவரம் அவர்களுடன் **தெலுங்கானா**வில் உள்ள **கம்மம்** மாநிலத்தின் காடுகளில் **கோயா** இன மக்கள் நிறைந்து வாழும் **அங்கம்பாலம்** என்ற சிறிய கிராமத்தை தெரிந்தெடுத்து கோயா இனமக்களின் பழக்க வழக்கங்களை கவணித்து அவர்களைப்போலவே தன்னையும் மாற்றிக்கொண்டார். **கூரை வேய்ந்த** ஒரு குடிசையில் குடியேறி அங்கு உள்ளவர்களுக்கு சுவிஷேசம் அறிவித்து அதோடு **மொழி பெயர்ப்பு** ஊழியத்தையும் தொடங்கினார். எழுத்து வடிமே இல்லாத **கோயா**

மொழியை ஆராய தொடங்கினார். அதன்பின் **கோயா மொழிக்கு** இவரே எழுத்துக்களை (லிபி) உருவாக்கி முடிவில் **லூக்கா சுவிஷேசத்தை** மட்டும் 1979 மே மாதம் மொழி பெயர்த்து முடித்தார் .

2004ம் ஆண்டு மார்ச் மாதம் 13ம் தேதி **புதிய ஏற்பாடு முழுவதையும் கோயா மொழியில்** மொழிபெயர்ந்து பூர்த்தியாக்கினார். அதன்பின் **கோயா** மொழியில் நம் தமிழ் **கிறிஸ்தவ** பாடல்களை மொழிபெயர்த்து **கோயா சபை** மக்களுக்கு கோயா மொழியில் பாடல்களை சொல்லி கொடுத்தார்.

இன்று அங்குள்ள மற்ற மிஷனரிகள் ஆரம்பித்த சபைகளிலும் கோயா மொழியில் பாடி, கோயா மொழியில் வேதத்தை வாசித்து ஆராதிப்பது எத்தனை பெரிய ஆசீர்வாதம். தான் மாத்திரம் **வாசித்து ருசித்த வேதத்தை** கோயா மக்களும் தங்கள் பாஷையில் வாசித்து கிறிஸ்துவை ருசித்து அவரை புகழ்ந்து பாடுவது எத்தனை பெரிய ஆசீர்வாதம். கர்த்தர் **கோயா** இன மக்களை நினைத்தருளினார் என்றுதான் நான் கூறுவேன். **கோயா மக்களும்** தங்களுக்காக **வேத புஸ்தகத்தை** மொழி பெயர்த்தவரை நன்றி உணர்ச்சியுடன் நினைவு கூறுகிறார்கள்.

சகோரனின் மரணத்துக்கு முன் அவர் **குடும்பத்தினர் செய்த தியாகம்** குறிப்பிட தகுந்தது. இதை யாரும் எழுதியிருக்கமாட்டார்கள்.

**சகோ. ஞானவரம்** அவர்கள் **ஆம்பூர்** என்ற ஊரில் இருக்கும் போது நான் நேரில் அவர் வீட்டுக்கு சென்று அவரிடம் பேசி சில தகவல்களை ஜாமக்காரன் பத்திரிக்கைகாக சேகரிக்க சென்றேன். காரணம் அவரின் சாட்சி வாசகர்களுக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும். சகோதரனின் **கைகள், கால்கள்** உடல் யாவும் **செயல் இழந்த** நிலையிலும் கர்த்தரிடம் **முறுமுறுக்காமல்** அந்த சூழ்நிலையிலும் மனோ ரம்மியயாக இருக்கிறார் என்பதை நானே நேரில் கண்டேன். மனைவி **சுகயீனமான** நிலையில் இருந்தார். ஒரு மகன் **மூளை வளர்ச்சி குன்றிய** நிலையில் **வாலிபனாக** வளர்ந்து வீட்டில் பிரயேஜனமில்லாத நிலையில் இருக்கிறான்.

ஆனால் சகோ. ஞானவரம் அவர்களின **மூத்த மகன்** அவரை குறித்துதான் நான் எழுத வேண்டும். அவர் **முடக்கு நீக்கி** (physiotherapy) படிப்பில் **டாக்டரேட்** எடுத்தவர். CMC ஆஸ்பத்திரியிலேயே உயர்ந்த சம்பளத்தில் வேலைக்கு அழைத்தும் அவர் செல்லவில்லை. அவர் படிப்பில் வாங்கின உயர்ந்த மார்க்குகளும் அவர் திறமைக்கான சர்ட்டிபிகேட்களுக்கு வெளி நாடுகளில் அவருக்கு நல்ல வேலை வாய்ப்பு இருந்தும் CMCக்கும் போகாமல் பல

வெளி நாடுகளின் அழைப்புகளையும் தவிர்த்து விட்டு தன் **மிஷனரி தகப்பனாருக்காக**. தன் **தம்பிக்காக** வீட்டு வேலை ஏதும் செய்ய முடியாத நிலையில் இருந்த தன் **தாய்க்காக** திருமண வயதை தாண்டியும் **திருமணம் செய்யாமல்** வீட்டிலேயே அப்பாவுக்கு **உருதுணையாக** இருந்தது மிகவும் போற்றத் தகுந்தது.

**தகப்பனார்** டாய்லட் செல்ல வேண்டுமானால் வீல் சேரில் செல்ல முடியாது. மூத்த மகன் தன் இருக்கைகளினால் **அப்பாவை தூக்கி** டாய்லட்டில் **உட்கார வைத்து. கழுவிவிட்டு. குளிக்க வைத்து** துடைத்து மறுபடியும் **அவரை தூக்கி** டைப் மிஷனுக்கு எதிரில் **உட்காரவைத்து** பைபிள் மொழி பெயர்ப்பு பணியை செய்ய உதவுவார். இது தினசரி இரண்டு முறை சில நாள் மூன்று முறைகூட நடக்கும் பணியாகும். அப்படியே அவர் தம்பியையும் கவனித்துக் கொள்வார்.


தனக்கு திருமணம் நடந்தால் மனைவி ஸ்தானத்தில் வருபவள் இதையெல்லாம் சகிப்பாளா? அருவருப்பாளா ! என்பதில் அந்த தம்பிக்கு சந்தேகம். அதனால் தன் உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்தி தகப்பன் ஊழியத்தில் உருதுணையாக இருந்தார்.

வீட்டை பெருக்கி சுத்தமாக்கி, வீட்டை தண்ணீர் ஊற்றி கழுவி. சமையல் செய்து முழு குடும்பத்துக்கும் தானே சமைத்து அந்த முழு குடும்பத்தையும் தன் **தோளில் மேல்** சுமை தாங்கியாய் சுமந்தவனாக வாழ்ந்ததை நானே **நேரில் பார்த்தேன். கோயா** மொழியில் **முழு வேத புத்தகத்தையும் தன் தகப்பனார் மொழி பெயர்த்து முடித்தபின்** பலர் கேட்டுக்கொண்டதற்கினங்க அவர் **திருமணம் செய்து கொண்டார்.** நல்ல மனைவி அவருக்கு அமைந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம் அந்த அருமையான சகோ. தேவவரத்தின் மேலே நான் குறிப்பிட்ட அந்த மூத்த மகனுக்காக கர்த்தரை துதிக்கிறேன். அந்த தம்பியின் வாழ்க்கை பலருக்கு முன் மாதிரியாக இருக்கட்டும். அந்த தம்பியின் பெயர் எனக்கு தெரியவில்லை. இதை வாசிக்கும் அனைவரும் சகோ. தேவஞானவரம் அவர்கள் விட்டுப்போன குடும்பத்துக்காக ஜெபிப்போம்.

## வெளிநாட்டில் வசிக்கும் வாசகர்களுக்கு

**கம்ப்யூட்டர்** வைத்துள்ளவர்கள் உங்கள் email ID அனுப்பினால் pdf மூலமாக ஜாமக்காரனை நீங்கள் எடுத்து வாசிக்கும் வகையில் நான் அனுப்புவது உங்ளுக்கு நல்லது. வீட்டில் உள்ளவர்களுக்கும் ஜாமக்காரனை பிரிண்ட் அவுட் எடுத்துக்கொடுக்கலாம்.

**இந்தியாவில் உள்ளவர்களும்** கம்ப்யூட்டர் whatsapp வைத்திருப்பவர்கள் இந்த ஆலோசனையை பின்பற்றலாம்.



# கிறிஸ்துமஸ் சிலுவைகள்

கிறிஸ்து பிறப்பின் கொண்டாட்ட நாட்களில் பிரபலமானவை கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகள், கிறிஸ்துமஸ் கேக் விற்பனைகள் பாடல்கள், போட்டிகள் முதலியன. ஆனால் எனது சமீபத்திய வேதத் தியானம் ஒன்றில் கிறிஸ்துமஸ் சிலுவைகளைக் கண்டேன். இது விகற்பமாய்த் தோன்றலாம். ஆனால் இதுதான் கிறிஸ்துமஸ்ஸின் மறுபக்கம். இது இல்லையேல் இரட்சரை பற்றிய ஒட்டுமொத்த விளக்கம் நமக்கு கிடையாது. கிறிஸ்துமஸ் சரிதை விளக்கப்பட்டுள்ள வேத பகுதிகள் மத்தேயு 1 & 2, லூக்கா 1 & 2

## ஐந்து சிலுவைகள்

### 1. இன்பம் இல்லாத கர்ப்பம்

திருமணமாகிய இளம் பெண்ணுக்குப் **கர்ப்பம் ஒரு பெருமிதம்.** புகைப்படங்கள். பாராட்டுக்கள். விழாக்கள் நிறைந்திருக்கும் ஆனால் **மரியாளின் கர்ப்பமோ வினோதமான கேள்விக்குரியது.** சமூகத்தில் ஒரு பெண்ணுக்கு அவமானம் (மத். 118:19) இதுபோல் நடந்ததில்லை. மரியாளின் சூழ்நிலையைபோல இந்நாட்களிலும் தேவன் நமக்குப் பல ஆசீர்வாதங்களைத் தந்திருந்தும், அவற்றைப் பல சமயங்களில் இயல்பாய் அனுபவிக்க முடியாதிருக்கிறோம். பெரும்பான்மை யினர் அனுபவிக்கும் நியாயமான இன்பங்கள் கூட நமக்கு எட்டுவதில்லை. ஆனாலும் இவ்விதச் சூழலைக் கர்த்தரிடம் ஒப்படைத்தால், அதன் விளைவு விளக்க முடியாத ஆசீர்வாதமாயிருக்கும்.

### 2. வசதிகள் இல்லாத பிரசவம்

நாசரேத்திலிருந்து (கலிலேயா) பெத்லகேமுக்கு (யூதேயா) பயணம் லூக் 2:1-5... 50 மைல்களுக்கு கூடுதல் தூரம். 400 ஆண்டுகள் அமைதியாய் இருந்த தேவன் மரியாள் கருத்தரிப்பதை ஒரு **சில மாதங்கள் தள்ளிப்போடச்செய்திருக்க முடியாதா** ? முழு கற்பிணியாய் இருந்தாள். துவக்க மாதங்களென்றாலும் பரவாயில்லாமல் இருந்திருக்கும்

(லூக் 2:6) என்று கூட நாம் சிந்திருக்கலாம். தேவ குமாரன் உருவாக **ஒரு கருவறையைத்** தேவன் ஆயத்தம் பண்ணினார். ஆனால் அவர் பிறப்பதற்கு ஒரு பிரசவ அறையை ஆயத்தம் பண்ண முடியாதா? **சத்திரத்தில்** இடமில்லை. (லூக் 2:7) கிறிஸ்துவின் கடினமான வாழ்க்கைக்கு ஓர் ஆயத்தம், இளம் பிராயத்தில் நுகம் சுமப்பது நல்லது. (புல. 3:27) தேவனே அதை தன்மீது வைத்தார். (வச. 28) **33 வயதில்** சிலுவை சுமந்தார். அதனால் எளியவரோடு தம்மை அடையாளப்படுத்துவது இயேசுவுக்கு எளிதாயிற்று. அநேகரை செல்வந்தராக்கும் படிக்கு அவர் தாமே தரித்திரரானார் (2 கொரி 6:10) வசதிகள் உங்களை வசதியாயிருக்க செய்துவிடாது. காலே இல்லாத ஒருவனைப் பார்க்கும் வரை எனக்குப் புது காலணிகள் இல்லையே என முறுமுறுத்தேன். எளிய வாழ்க்கை முறை உயரிய சிந்தனைக்கு வழிவகுக்கும்.

### 3) கீர்த்தி இல்லாத வம்சம்

யூத வம்ச வரலாறுகளில் **பெண்கள் பெயர்கள் இடம் பெறுவதில்லை**. ஆனால் மத்தேயு 4 பெண்களைக் குறிப்பிடுகிறார். அதில் இருவர் நடத்தைக்கேடு உள்ளோர். 1) ராகாப் (மத் 1:5) வேசி, 2) பத்சேபாள் (மத் 1:6) பாவம் செய்ய அரசனது அழுத்தத்திற்கு இணங்கியவள். அவளது பெயர் கூட சொல்லப்படவில்லை. உரியாவின் மனைவியிடம் பிறந்த சாலமோன் இயேசு பெத்லகேமில் பிறந்தார். இந்த பெத்லகேம் **யூதாவின்** 1000 பட்டணங்களில் **சிறியதாகும்.** (மீகா 5:2, மத் 2:6) நாசரேத்தில் வளர்ந்தார். (மத் 2:23) **நாசரேத்திலிருந்து நன்மையா?** தங்கள் இடம் இனம் குறித்து மார் தட்டுவோருண்டு. உங்கள் **எளிய பின்னணியைக்** குறித்து கலக்கமா? தேவன் தாழ்மையானவர்களை உயர்த்தினார். (லூக்1:48, 52) **அந்தஸ்து** அருகதை **இல்லாதோரைதான்** தேவன் அழைக்கிறார். (1 கொரி26-29) இயேசு அவர்களுக்கு எல்லாமுமாகிவிடுகிறார். (வச. 30) எல்லாம் இயேசுவே. இயேசுவின் பொருளாதார நிலையை பார்க்கும்போது **மரியாள்** ஆட்டுக்குட்டியல்ல. **புறா குஞ்சுகளையே** பலிக்காக கொண்டுவர முடிந்தது. (லேவி 12:8) யோசேப்பு **தச்சனாக** இருந்தபடியால் இயேசுவும் **தச்சனாக அழைக்கப்பட்டார்.** இயேசு தம்மைத்தாமே **தாழ்த்தினார். .. தேவன் உயர்த்தினார்**. எனவே கிறிஸ்துவிலிருந்த இந்த சிந்தையே நம்மிலிருக்கட்டும். (பிலி. 2:5-9)

### 4) அற்புதங்கள் இல்லாத தேவ தூதர்

**கிறிஸ்துமஸ் சிரிதையில்** தூதர்களின் பங்கு மிக முக்கியம். தமது மக்களுக்குத் தேவன் ஆற்றும் பணிகளே தேவ தூதர்களின் சந்திப்புகளாகும். தூதர்கள் என்றால் இரட்சிப்பைச் சுதந்தரிப்போருக்குப் **பணிவிடை ஆவிகள்** என எபி 1:14ல் வாசிக்கிறோம். தூதன் சொன்னது அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக. ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை

நீக்கி அவர்களை இரட்சிப்பார் (மத். 1:21) இயேசு தேவனே நமது இரட்சிப்பு என்று கர்த்தராலே உரைக்கப்பட்டது. தீர்க்கன் மூலமாய் கூறப்பட்டது அவர் இம்மானுவேல்.. தேவன் நம்மோடு (வசன 23) இருந்தால் **எகிப்திற்கும். கலிலேயாவுக்கும்** யோசேப்பு ஓடுவானேன்.? மத். 2:13 (ஏரோது) 2:22 (ஏரோதின் மகன்) **ஆணுதவியின்றிக்** கன்னி வயிற்றில் **கருவைத்** தேவனால் விதைக்க முடியுமானால். ராஜாவின் கைகளுக்கு அந்த சிலுவை தப்பிவிக்க முடியாதா என்ன? **கைகுழந்தையோடு** அங்குமிங்கும் ஒடுவது சுலபமா? இதில் சத்தியம் என்னவென்றால் தேவன் **எப்பொழுதுமே அற்புதங்கள் செய்துவிடுவதில்லை**. தமது ஆதினத் திட்டத்தின்படியே செய்வார். **அற்புதம் இல்லாது** தேவன் நம்மை நடத்துவரெனில் **அதுதான்பெரிய அற்புதம்.** தேவ செயல்கள் எப்பொழுதுமே கவர்ச்சியாயிருக்க அவசியம் இல்லை. நாம் உணர்ந்தாலும் உணராவிட்டாலும் **தேவன் நம்மோடுதான்.** தேவன் தந்த நிகரற்ற அற்புதம் இயேசுவே நம்மோடு இயேசு இருந்தால். தேவனது யாவும் நமதே. சொந்த குமாரனையே ஒப்புக்கொடுத்தவர். (ரோமல் 8:2) ஜான் வெஸ்லி அவர்கள் கூறும்போது **தேவன் நம்மோடு இருப்பது** அதுதான் பெரிய காரியம் என்கிறார்.

### 5. குதுகலம் இல்லாத சந்தோஷம்

**மிகுந்த சந்தோஷம்** உண்டாக்கும் **நற்செய்தி** என்றே கிறிஸ்து பிறந்த செய்தி மேய்ப்பருக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் அவர் பிறந்து 8ம் நாளில் கூறப்பட்ட ஆசீர்வாத வார்த்தைகளில் **மரியாளில் நெஞ்சை பிளக்கும்** ஒரு கூற்று. பின்னும் சிமியோன் அவர்களை ஆசீர்வதித்து இதோ அநேகருடை சிந்தனைகள் வெளிப்படதக்கதாக இஸ்ரவேலில் அநேகர் விழுகிறதர்கும் எழுந்திருகிறதர்க்கும் விரோதமாகப் பேசப்படும் அடையாளமாவதற்கும் இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். உன் ஆத்துமாவை ஒரு **பட்டயம் உருவிப்போகும்** என்றான். (லூக் 2:3,35) ஆசாரியனிடமிருந்து வந்த இந்த வார்த்தைகள் ஒரு தாய்க்கு எப்படி இருந்திருக்கும்.? ஆயிரமாயிரமான **குற்றமில்லா பாலகர்** மரணம் (மத் 2.16-18) அந்த பாலகர்களின் தாய்மார்கள் **மரியாளைப்பற்றி** என்ன பேசியிருப்பார்கள்? **ஆணின்றி** கருத்தரித்தவள். இப்போது **நியாயமாய் பிறந்த எங்கள் பிள்ளைகள்** மரணத்திற்கு காரணமாகிவிட்டார்களே ! பிள்ளையை இழப்பதென்றாலென்ன? என **இயேசுவுக்கு தெரியும்** தமது தாய்க்கு முன்னால்தனே அவர் துடி துடித்து மரித்தார். அவர் **பாடுபட்டதினால்** பாடுபடுவோருக்கு உதவ வல்லவராயிருக்கிறார். அவர் யெரே **தேற்றரவாளன்.** என்பதுதான். அவரது **ஆவியானவரின் பெயர் இன்னொரு தேற்றரவாளன்.**

உலகம் முழுவதும் கிறிஸ்துமஸ் குறித்து பேசும் இவ்வேளையில் உங்களை குத்திக்கொண்டிருக்கும் **முட்கள் யாவை**? உங்களை நசுக்கிக்கொண்டிருக்கும் **சிலுவைகள்தான்** எவை? இந்த உலகில் உனக்கு **நியாயமான இன்பங்களும்** கிடைக்கவில்லையா? வாழ்வில் பாதகங்கள் நிறைந்துள்ளனவா? எளிமையான சமுதாய அந்தஸ்து உடையவரென்று உன்மையே நினைத்துக்கொள்கிறாயா? பாடுகளோடுதான் கிறிஸ்துமஸ் நாட்களை கழிக்க வேண்டுமோ என்று தயங்குகிறாயா? நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்பதை **மீ96யேசு அறிந்திருக்கிறார்**. மேலே வாசித்தது போல **கிறிஸ்து பிறப்பின் போதே ஐந்து விதமான சிலுவையை சுமந்ததின் விளைவாக** எளியவரோடு தம்மை அடையாளப் படுத்திக்கொள்வது எளிதாயிருந்தது. பலவிதமான நுகத்தை சுமக்கும் நம்மைப் போன்றவரை அறிந்து அவர்களுக்கு உதவி செய்ய ஏற்புடையதாயிருக்கிறது. கிறிஸ்து அவரின் **சிலுவை** மரணத்தின்போது பிதா அவரை மேன்மைப் படுத்துவதற்கு வழிவகுத்தது. எனவே நாமும் இவ்வுலகத்தில் சிலுவை என்று எண்ணி சுமக்கும் காரியத்தில் **இம்மானுவேல்** என்ற நாமத்தை உடைய கிறிஸ்து **நம்மோடு இருப்பதனால்** வெட்கப்படாமல் **மேன்மைபடுத்துவோம்** என்ற நிச்சயத்தோடு இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் நம்முடைய எல்லா சூழ்நிலைகளையும் கர்த்தரிடம் ஒப்படைத்தால் அதன் **விளைவு விளங்க** முடியாத ஆசீர்வாதமாயிருக்கும்.

## ONLINE BANKING (NEFT)

**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA S.B. A/C**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**

SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH) **S.B. A/C**

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**

SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**



**வாழ்த்துகிறோம் !** **வரவேற்கிறோம் !!**

## திருநெல்வேலி CSI டையோசிஸ்க்கு புதிய பிஷப்

திருநெல்வேலி பேராயத்தின் புதிய பேராயராக தெரிந்தெடுக்கப்பட்ட Rt. Rev. ARGST **பர்ணபாஸ்** அவர்களை என் சொந்த பெயரிலும் **ஜாமக்காரன்** இந்தியா & அனைத்துலக வாசகர்கள் பெயரிலும் சந்தோஷத்தோடு வரவேற்கிறோம் – வாழ்த்துகிறோம்.

கர்த்தர் தாமே பேராயர் அவர்களையும் – புதிதாக தெரிந்தெடுக்கப்பட்ட டையோசிஸ் லே-செயலர் மற்ற உடன் நிர்வாகிகள் அனைவருக்கும் வாழ்த்துதல் கூறுகிறோம். புதிய பிஷப் தலைமையில் திருமண்டலத்தில் உள்ள சபைகளும், மஷனரி பணித்தளங்களும் பெருகி திருமண்டலம் **வசனத்தில் வளர** கர்த்தர் அருள் புரிவராக. ஜெபிக்கிறோம்.

– ஜாமக்காரன்

NOVEMBER 2021

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.